செ.வெ.எண் :641 நாள்: 01.10.2021

**பத்திரிக்கை செய்தி**

**பொதுமக்கள் குறைதீர் நாள் கூட்டம் 04.10.2021 முதல்**
**நடைபெற உள்ளது தொடர்பான அறிவிப்பு**

பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒவ்வொரு திங்கள் கிழமை தோறும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கொரோனா வைரஸ் நோய் தொற்று பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் ஏதுவாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறாமல் மனு பெட்டிகள் மூலம் மனுக்கள் பெறப்பட்டு தொடர்புடைய துறைகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவந்தன. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி எதிர்வரும் 04.10.2021 முதல் ஒவ்வொரு திங்கள் கிழமை தோறும் கொரோனா நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளதால், பொது மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்துக்கொண்டு மனுக்களை நேரடியாக மாவட்ட ஆட்சியரிடம் அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கொண்ட தகவலினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. தெரிவித்தார்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்**